செ.வெ.எண்: 563 நாள்: 02.10.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**
**அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு தீபாவளி கதர் சிறப்பு விற்பனையை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.**

---

புதுக்கோட்டை சீதாபதி பிள்ளையார் கோவில் அருகில் உள்ள கதர் அங்காடியில் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள், மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் ஆகியோர் இன்று (02.10.2021) அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அண்ணல் காந்தியடிகளின் திருவுருவப்படத்தினை திறந்து வைத்து, தீபாவளி கதர் சிறப்பு விற்பனையை தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாநிலங்களவை உறுப்பினர் திரு.எம்.எம்.அப்துல்லா அவர்கள் கலந்து கொண்டார்.

இன்று இந்திய திருநாட்டின் விடுதலைக்காகவும், தன்னிகரற்ற முன்னேற்றத்திற்காகவும், தன் வாழ்க்கையினையே முழுமையாக அர்ப்பணித்த அண்ணல் காந்தியடிகளின் நினைவுகளை போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆக்டோபர் திங்கள்-2 ம் நாள் அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாள் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் புதுக்கோட்டை கதர் அங்காடியில் தீபாவளி சிறப்பு விற்பனை இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 2021-22 ஆம் ஆண்டிற்கு ரூ.130.90 இலட்சம் கதர் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.66.90 இலட்சம் மதிப்பிற்கு கதர் ரகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளைப் போலவே நடப்பாண்டிற்கும் மாநில அரசு மற்றும் கதர் கிராமத் தொழில்கள் ஆணைக்குழுவினரால் கதர் விற்பனைக்காக மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு காந்தி ஜெயந்தி மற்றும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சிறப்பு தள்ளுபடியினை அரசு அளித்துள்ளது. இதன்படி கதர் 30 சதவீதமும், பட்டு 30 சதவீதமும் மற்றும் பாலியஸ்டர் 30 சதவீதமும் தள்ளுபடியில் விற்பனை செய்யப்படும். புதுக்கோட்டை

மாவட்டத்தில் புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கி ஆகிய பகுதிகளில் காதிகிராப்ட் விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இது தவிர புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள், அரசு மருத்துவமனைகள், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்கள் ஆகியவற்றில் தீபாவளி சிறப்பு விற்பனையை முன்னிட்டு 6 தற்காலிக விற்பனை நிலையங்கள் அமைத்து கதர் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் அனைவரும் கிராமப்புற ஏழை பெண்களின் மேம்பாட்டு நலனைக் கருதியும், சிறு தொழில் வல்லுனர்களை ஊக்குவித்து ஆதரவு தரும் வகையிலும், மாநில அரசும் கதர் கிராமத் தொழில்கள் ஆணைக்குழுவும் வழங்கியுள்ள மாபெரும் தள்ளுபடி நலுகையைப் பயன்படுத்தி கதர் இரகங்களை அதிக அளவில் வாங்கி ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

எனவே அனைத்து அரசுத்துறை அலுவலர்கள், பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொது மக்கள் கதர் துணி இரகங்களை அதிக அளவில் வாங்கி இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம் அண்ணல் காந்தியடிகளின் கனவுகளை நனவாக்கும் வகையில் நலிவடைந்த கிராமாப்புற கைவினைஞர்கள் மற்றும் பெண்கள் முன்னேற்றத்திற்கு ஆதரவை வழங்க வேண்டும் என மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள், மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் ஆகியோர் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் உதவி இயக்குநர் (கதர் கிராமத் தொழில்கள்) திரு.சு.சந்திரசேகரன், வருவாய் கோட்டாட்சியர் அபிநயா, நகராட்சி ஆணையர் நாகராஜன், வட்டாட்சியர் செந்தில்குமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ரெ.மதியழகன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**